மற்றும் திரு. மைதீன் பிச்சை என்பவரின் மகள் செல்வி இர்ஃபானா ஆஷிகா ஆகியோரின் குடும்பத்திற்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) ஆத்தூர் தொகுதி, தெத்துப்பட்டி, யானை தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், ஆத்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட தெத்துப்பட்டி கிராமத்தைச்சேர்ந்த திரு. வேலுச்சாமி என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் யானை தாக்கி உயிரிழந்ததற்கு அன்னாரது குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் வனத் துறைமூலம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஈ) காஞ்சிபுரம் மாவட்டம், மாரிமங்கலம், ஆட்டோவில் கடத்தப்பட்டவரைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரிழந்த திரு. ஏகேஷ் மற்றும் சில இளைஞர்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கூட்டுச் சாலையில், இரவு பணி முடிந்து வீடு செல்வதற்காக 25–12–2019 அன்று ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மாரிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. லோகநாதன் என்பவரின் மனைவி திருமதி பவானி என்பவர், ஆட்டோ ஓட்டுநர் வழி மாறி வேறு பாதையில் செல்வதையும், ஆட்டோ ஓட்டுநரின் அத்துமீறலாலும் தன்னைக் காப்பாற்றும்படி கூச்சலிட்டதில், அலறல் சத்தம் கேட்டு சாலையோரம் நின்றிருந்த இளைஞர்கள் திரு. ஏகேஷ், திரு. ஈஸ்டர் பிரேம்குமார், திரு. வினீத், திரு. சார்லிபன் மற்றும் திரு. பிரிஸ்டன் பிராங்களின் ஆகியோர், இரு சக்கர வாகனத்தில், ஆட்டோவைத் துரத்திச் சென்று திருமதி பவானியைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.*

இளைஞர்கள் ஆட்டோவைத் துரத்திக்கொண்டு வருவதை அறிந்த ஆட்டோ ஓட்டுநர், ஆட்டோவை விரைவாக ஓட்ட, திருமதி பவானி ஆட்டோவிலிருந்து குதித்தார். இதனைப் பார்த்த பொதுமக்கள், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.